தலைவர் அவர்களே, இந்த நிலை சமீப காலத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக தமிழகத்திலே இந்தியைத் திணிக்கக்கூடாதென்ற வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றிய பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலை இது. அங்குள்ள மகாராஷ்டிர அரசாங்கமோ, வேறு அரசாங்கங்களோ, சிவாஜி சேனை நடவடிக்கையைத் தடை செய்ய முன்வரவில்லை. இதனால் நம்முடைய தேசீய ஒருமைப்பாடு சீர்குலைகிறது. தேசீய ஒருமைப்பாட்டில் அக்கறை கொண்டுள்ள மத்திய அரசு இதிலே தலையிட்டுதடுத்து நிறுத்த முடியாத நிலை இருக்கிறது. அதோடு கூட இதனால் 15,000 தொழிலாள மக்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இதிலே சிவாஜி சேனை ஈடுபட்டிருப்பதோடு கூட அந்த நடவடிக்கைகளுக்கு வேறு சில அரசாங்கங்கள் பின் பலமாக இருக்குமோ என்ற சந்தேகம் இருக்கிறது. மீண்டும் இந்தித் திணிப்பைக் கொண்டு வரும் நிலைமையும் இருக்கிறது. ஆகவே, தேசீய ஒருமைப்பாட்டைக் குலைக்கும் வகையில் நடக்கும் இந்தக் காரியத்தைப் பற்றி அன்றாடப் பிரச்சினை என்று கருதாமல் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி விவாதிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, இது குறித்துப் படத் தொழிலில் ஈடுபட்டவர்களும், மற்றவர்களும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இதைப் பற்றி இந்த அவையிலே விவாதிப்பதின் மூலம் நிலைமைகள் மேலும் சீர்கேடு அடையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இதையும் அரசின் அன்றாட நடவடிக்கைகளில் ஒன்றாகக் கருதி இதிலே ஏற்பட்டிருக்கின்ற சிக்கலைத் தீர்க்க இந்த அரசு தகுந்த முறையில் கவனிக்கும் என்ற எண்ணத்தோடு இதை விவாதிக்காமல் இருப்பது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசினரின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டு தீர்க்கக்கூடிய காரியம் என்ற காரணத்தால், பேரவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கத் தேவையில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

(iii) கச்சத்தீவு செல்ல தமிழக மக்களுக்குத் தடை

திரு. செ. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகச் சட்டப் பேரவை 42-ஆவது விதியின்படி கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பற்றி விவாதிக்க சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி அறிவிக்கை கொடுத்துள்ளேன். அதாவது—

" தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத் தீவுக்கு அர்ச். அந்தோணியார் திருவிழாவுக்குச் சென்ற தமிழக மக்களை சுங்க அதிகாரிகளும், துறைமுக அதிகாரிகளும் தடுத்து நிறுத்தியதால் ஏற்பட்டிருக்கும் அவசர நிலை ".

தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இந்த அரசாங்கத்திற்கு இருக்கும் மிகக் குறுகலான பொறுப்பை அறிவேன். நான் அதிகமாக எதுவும் சொல்ல விரும்பவில்லை. இந்தப் பிரச்சினை பற்றி இந்திய அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுத்ததாகக் காணோம். இந்த மன்றத்தின் உணர்வுகளையும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும் இந்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கும் வகையில் இதைப் பற்றி விவாதிப்பது பயனுள்ளதாக அமையும். காலையில் பத்திரிக்கையில் படிக்கும்போது பார்த்ததில், " இங்கிருந்து செல்கின்றவர்கள் அர்ச் அந்தோணியார் கோவிலுக்கு அனுமதிக்கப்பட்டார்கள் " என்று போடப்பட்டிருக்கிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று தெரியவில்லை. அந்தச் செய்தி உண்மையா என்று அறிய விரும்புகிறேன். இது சம்பந்தமாக இந்த அரசாங்கம்

இந்திய சர்க்காருக்கு என்ன முறையில் வலியுறுத்தி வருகிறது என்பதைப் பற்றியெல்லாம் முதலமைச்சர் அவர்கள் சொல்வார்களானால் நலமாக இருக்கும். இதைப் பற்றி விவாதிக்க இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதுபற்றி மத்திய அரசு மாநில அரசிடத்தில் தகவல் கேட்டிருக்கிறது. தகுந்த தகவல்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே இதுபற்றி தனியாக அவையை ஒற்றிவைத்துத்தான் பேச வேண்டுமென்ற அவசியம் இல்லை. உறுப்பினர் அவர்கள் பொது நிர்வாகம் பற்றி பேசுகிற நேரத்தில் இவைகளைப் பற்றியெல்லாம் குறிப்பிடலாம். இங்கிருந்து சென்றிருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி விரிவாக விவாதிப்பதற்கு சௌகரியங்கள் எல்லாம் இருப்பதால் இதை விவாதிக்க அவையை ஒற்றிவைக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் காரியத்தில் மாநில அரசு ஈடுபட்டிருந்தாலும் நம் விதி 50 (10) படி இது முற்றிலும் தமிழக அரசின் பொறுப்பிற்கு உட்பட்டதாக இல்லை. எனவே அனுமதி மறுக்கப்படுகிறது.

அடுத்து, 41-வது விதியின்கீழ் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு திரு. சு. துரைசாமி அவர்கள் ஒரு காரியத்தைக் கொண்டு வருகிறார்கள்.

3. கவன ஈர்ப்பு.

பல்லடம் தாலுகாவில் பருவமழை தவறியதும் கூட்டுறவுச் சங்கக் கடன் வசூல் ஒத்திவைப்பும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 41-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட அவசரமும், பொதுமுக்கியமும் வாய்ந்த காரியத்தை நான் சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

"பருவமழை தவறிய காரணத்தால் கோவை மாவட்டம் பல்லடம் வட்டத்தில் பயிர் விளைச்சலின்றியும், குடிதண்ணீர்கூட இல்லாமலும் கால்நடைகளைப் பராமரிக்க முடியாமல் விற்றுக்கொண்டும் மக்கள் அவதியுறுவதால் கூட்டுறவு நாணயச் சங்கங்களின் மூலமாக வழங்கப்பட்ட கடன்களை ஓராண்டுக் காலம் ஒத்திவைக்கவேண்டும்".

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழே இந்த விவர அறிக்கையை அளிக்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி வழங்கியுள்ள கடன்களை, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாகக் குடியானவர்கள் உரிய தேதியில் திருப்பிச் செலுத்த இயலவில்லையென, அம் மாவட்டத்தின் பல்லடம், தாராபுரம் வட்டங்களில் உள்ள கிராமக் கடன் வழங்கு சங்கங்கள் முறையிட்டுள்ளன. எனவே, கோயம்புத்தூர் கூட்டுறவு மத்திய வங்கியின் நிர்வாகக் குழு, பல்லடம் வட்டத்தில் பருவமழை பொய்த்ததன் காரணமாக விளைச்சல் மிகவும் குன்றியுள்ள பகுதிகளைக் குறிப்பிடுமாறு, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டது. அப்போதுதான், அத்தகவலின் அடிப்படையில், குறுகிய காலக் கடன்களை நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றியமைப்பதன் மூலம் குடியானவர்களுக்கு உதவி அளிப்பது குறித்து ஆலோசிக்க முடியும். பல்லடம் வட்டம் முழுவதிலும் தாராபுரம், கோபிசெட்டிபாளையம், அவனாசி, ஈரோடு வட்டங்களில் சில வட்டாரங்களிலும் அணா வாரிக் கண்டுமுதல் ஆறணாவிற்கும் குறைவாக இருந்தது என்று கலெக்டர் தெரிவித்துள்ளார். எனவே, இந்தப் பகுதிகளில்